Regd. No. M. 4593. "KUDI ARASU" 12பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

ஓலை 18 } தாரண, 3-3-1945 மாசி-மீ 20௳ { மலர் 21

## அடிமை மணம்

"திராவிடன்"

அநேக நாடுகளில் மணமானது புருட சம்பந்தத்திற்கு ஏற்படும் அடிமைத்தன்மையாக விருக்கின்றது. பெண்கள் விலைக்கு வாங்கப்பட்டு, அவர்களது இணக்கமின்றியும் அவர்கள் உணர்ச்சிகள் சிறிதும் பொருட்படுத்தப்படாமலும் மணம் செய்விக்கப்படுகின்றனர். சில வேளைகளில் பெண்களின் மணமானது அவர்கள் பிறப்பதற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. பெண் கணவனொருவனை மணக்க எவ்வளவு வெறுத்தாலும் சரி, அவன் கீழ்ப்படிந்து மணந்தே தீரவேண்டும். பெரும்பான்மையான சம்பவங்களில் பழைய வழக்கங்கள் நீக்கப்படுமேயானால், பெண்களே துன்பமடைய நேரிடுகிறது. பசுடோலண்டு என்னும் சிறுநாட்டிலுள்ள பெண்களைப்பற்றிய சட்டங்கள் மிகவும் கொடூரமானவை.

### பெண்களுக்குத் தடைச்சட்டம்

1915-ம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவின் கவர்னர் ஜனரல் லார்டுபக்ஸ்டன் செய்த விளம்பரத்தால் ஆப்ரிக்கா நாட்டுப் பெண்கள் தடைசட்டம் அங்கீகரிக்கப்பட்டது. அச்சட்டமாவது:— (அ) விவாகமாயிருந்தால் தனது கணவனின் இணக்கமின்றியும் (ஆ) விவாகமாகாதிருந்தால் தந்தை அல்லது காப்பாளர் இணக்கமின்றியும் ஒரு ஆப்பிரிக்கா நாட்டுப் பெண்ணும் தேசத்தை விட்டு நீங்கக் கூடாது. எந்தப் பெண்ணாவது ஓடிவிடுவாளேயானால், அவள் ஓடிப்போகும் நாயைக் கைப்பற்றுவது போல் கைப்பற்றப்பட்டு, சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படுகிறாள். இவ்வழக்கம் அடிமைத் தன்மையே தவிர வேறல்லவென்று ஒரு ஆங்கில மாது எதிர்த்த போது, உள்நாட்டுக் கமிஷனர் சிறுமிகள் நன்றாக நடத்தப்படுவதால் அவர்களுக்கு ஒருவிதக் கஷ்டமுமில்லையென்றும்; ஆனால் நிரம்பிய சிறுமிகள் தங்களுக்கு விவாகம் ஏற்பாடு செய்தவுடன் ஓடிவிடுகின்றனர்களென்றும் அதனால் அங்குள்ள மனிதர்கட்குத் துன்பம் நேரிடுகிறதென்றும் கூறினர்.

ஆப்பிரிக்கா வாசிகள் அனைவரிலும், பெண் எல்லோருக்குமுரிய 'சொத்தைப் போல் கையாளப்படுகின்றனள். ஆப்பிரிக்காவில் வட நாடாயினும் தெற்கேயாயினும் அல்லது மத்திய பிரதேசங்களாயினும் சரி, பெண்கள் பிறருக்கு உரியவர்களாகவேயிருக்கின்றனர். பிறந்ததிலிருந்து சாகும் வரையிலும் பெண்களுக்குச் சுவாதீனமாவது சுதந்திரமாவது சிறிதும் கிடையாது. மஹமதியர் சட்டத்தின்படி பெண்களுக்குச் சொத்துக்கள் சம்பந்தமாகச் சில உரிமைகள் உண்டு; ஆனால் அவர்கட்கும்கூட தற்சுவாதீனம் கிடையாது. மற்ற ஆப்பிரிக்கா வாசிகளில் பெண்களுக்கு சொத்துரிமையே சிறிதும் கிடையாது. பெண் தனக்குத்தானே சொத்தாகின்றாள். யூனியன் ஆட்சியின் கீழிருக்கும் தென்னாப்பிரிக்காவில், அந்நாட்டு மக்களில் பெண்களும் சொத்துக்கள் போன்று உரிமைக்குரியவர்களாக இருக்கின்றனர். அங்கே ஒரு குடும்பத்தில் தந்தை இறந்துபடுவானேயாகில், அவன் விட்டுப்போன சொத்துக்களும் பெண்களும், பிள்ளைகளுக்குப் பங்கிடப்படுகின்றன. ஒரு பெண் தன் கணவன் மறித்தவுடன் தன் பிள்ளைகளுக்கு உரியவளாகவிருக்கின்றாள். பிள்ளையே இல்லாமற்போனால், நெருங்கிய உறவினரின் ஆட்சியின் கீழ், அவளிருக்க வேண்டும். லாபம் தரத்தக்கதும், தனக்கு மன ஒப்பந்தமான வேலை செய்வதினின்றும், ஒரு பெண்ணை உரிமையுள்ள மனிதர்கள் நீக்கி அழைத்துக்கொண்டு போகலாம். என்னே அவர் தம் நிலைமை!

மாஜிஸ்டிரேட்டுகளும், நாட்டுக் கமிஷனர்களும் ஆண்கள் பெண்களின் மீது செலுத்தும் அதிகாரங்களை ஆதரிப்பதோடு, பெண்களை ஆண்களுக்கு அடங்கி நடக்கும்படி பலவந்தப்படுத்தவும் செய்கின்றனர். இவ்வழக்கம் அடிமைத் தன்மையே தவிர வேறல்ல.

தென்னாப்பிரிக்காவில் லபோலா மணம் என்னும் வழக்கமொன்றிருக்கிறது (லபோலா மணம் தமிழ் ஆயர் மணம் போல்வது) சாதாரணமாகத் தகப்பன்மார்கள் தங்கள் பெண்களை ஆடுமாடு முதலியன வாங்கிக்கொண்டு பிறருக்கு மணத்திற்கோ அல்லது காதற்கிழத்தியாக விருப்பதற்கோ அளித்துவருகின்றனர். ஆனால், அப்பெண்ணுக்கு மனைவிகட்குரிய உரிமைகளில்லை. சர்வதேச ச[illegible]டிமை விலக்கு கையேற்பமீட[illegible] இரண்டு ஆண்டுகளுக்குப் பி[illegible]க்கமானது 1927-ம் ஆண்டி[illegible]னியன் அரசாங்கச் சட்டத்தால் செம்மைபடுத்தப்பட்டது.

அவ்வகுப்பினர்களை ஆட்சிபுரியும் வெள்ளையர்கள் பழக்க வழக்கங்களில் சிறிதும் தலையிடக் கவலை யெடுத்துக் கொள்வதில்லை. பழக்க வழக்க விஷயத்தில், பாதிரிமார்கள் அப்பெண்களின் பரிதாபகரமான நிலைமையை நன்கு உணர்ந்திருந்தும் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டியிருக்கிறது. பாதிரிகள் வைத்திருக்கும் பாடசாலைகளில் நல்ல கல்வியறிவுபெற்றும், பெண்கள் முடிவில் அந்நாட்டுக் காட்டுமிராண்டி மணச்சட்டத்திற்கே உட்படவேண்டியிருக்கிறது.

பிரஞ்சு ஆட்சியின் கீழிருக்கும் வட ஆப்ரிக்காவில், பல கொடூரமான வழக்கங்களும் சட்டங்களுமிருந்து வருகின்றன. ஆப்ரிக்காநாட்டுச் சிறுமியொருத்திக்குத் தாய்தந்தையரில்லை. அவள் பாதிரிமார்களின் பாடசாலையில் கல்வியறிவுபெற்று, கிறிஸ்துவமதத்தில் சேர்ந்துகொண்டவனும் ஆசிரியனுமான ஒருவனை மணம்செய்துகொண்டு வாழ்ந்து வந்தாள். ஆறு மாதங்கள் கடந்தன. பின்பு ஒரு ஆப்பிரிக்கன் அப்பெண் தனக்குரியவளென்றும், அவ்விருவரும் குழந்தைகளாகவிருக்கும்போது அவனுக்காக அப்பெண்ணைத் தன் தந்தை விலைகொடுத்து வாங்கினாரென்றும், கூறி அப்பெண்ணை அன்னவன் பலவந்தமாக அழைத்துக்கொண்டு சென்றான். சட்டம் அவனை அங்ஙனம் செய்ய அனுமதித்தது. அப்பெண் அவனோடு போகத்தான் வேண்டியிருந்தது.

அடிமைத் தன்மையின் நிலைமை இவ்

# நான் காணும் திராவிடம்

புதுப்பேட்டை திராவிட மாணவர் மாநாட்டில் தோழர் இரே. இளம்வழுதி அவர்கள் ஆற்றிய திறப்புரை:-

வந்தவனுக்கெல்லாம் வைப்பாட்டியாய், எடுப்பார் கைப்பிள்ளையாய் வாழ்ந்து வந்த திராவிடத்தின் இருண்ட நிலையே என் கண்முன் காட்சியளிக்கிறது. மதத்தை மார்க்கமாகக் கொண்டு மாற்றான் மிரட்டியவுடன் அறியாமையால் அஞ்சி அடி பணிந்துவிட்டது. மூடத்தனத்தின் முன் முழந்தாளிட்டது. கலையென்ற கண்ணியில் கால்வைத்து சின்னபின்னமாகச் சிதறியது. உரிமை உள்ளத்தைப் பறிகொடுத்து அடிமை வாழ்வின்

ஊழல் கோதிலையானதாக[illegible]ப்பினும் கூட, பெண்கள் ஆண்களு[illegible]டைமை களாகவிருக்க வேண்டு[illegible]க் கம் என்றும் நிலவுகிலையாச்[illegible]சட்டம்போற்கணப்படுகிறது.

கீழ்நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் மனத்தால் பெண்கள் பெரும் அடிமைகளாயினர்.

இளஞ்சிறுமிகளும், குழந்தைகளும், பிறர்மேல் காதல் வைத்திருக்கும் பெண்களும், கிழவர்களுக்கும், காமக் குரோதர்கட்கும், பெண்கள் பெரிதும் வெறுக்கும் பேர்வழிகட்கும் மணம் செய்விக்கப்படுகின்றனர். இக்கொடும் சம்பவங்களால் உண்டாகும் தீமைகள் அளப்பில. விபசார வர்த்தகத்திற்காக வருத்தப்படும் பெண்களும் மணம் என்னும் பேரால் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அனுபவித்தவரென்பது திண்ணம். விபசாரத்திற்காக மனமாற்றப்பட்டப் பெண்களைவிட மணம் செய்து கொள்ளும் பெண்கள் அதிகம். இவர்களில் சிலர் மனம் ஒப்பிப் போகின்றனர்; சிலர்மனம் ஒப்புவதிலை. எவ்வனமிருப்பினும் மணம் செய்து கொண்ட பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அவர்கள் தொகைக்கு மேலிருக்கிறதென்பது மிகையாகாது. மேலும் இவர்கள் நிலைமை மேற்கூறிய பெண்களின் நிலைமையைவிடக் கேடுகெட்டதாகவே யிருக்கிறது.

ஆண்மக்கள் அடிமைகளாகவிருந்த போது, நாகரீகமடைந்த மக்களின் மனச்சான்று, அவ்வழக்கத்தைச் சகிக்கவில்லை. இதுபோது விபரீதமான பெண்களின் அடிமைத்தன்மையான நிலைமையோ ஒரு சிறிதும் பொருட்படுத்தப்படவில்லை.

ஆனந்தங்கொண்டது. வலிவிழந்து, வாய்மையிழந்து, மதிப்பிழந்து, மானமிழந்து வளர் திராவிடம் விரோதிகளுக்கு வெறும் வேட்டைக் காடாகவே விளங்கியது. ஆனால், தூங்கினவன் தொடையில் திரித்தது லாபமென்றிராமல் தூங்கினவனைத் தொலைக்கவே துணிந்தான்! தன் விழுத்த வஞ்சக விரோதியை வாளால் வீழ்த்தாமல், வாழ்த்திக் கொண்டா இருப்பான்? அதே போல், திராவிடம் விழித்துக் கொண்டுவீர முழக்கம் செய்யும் காலம் வெகுதூரத்திலில்லை. விழிப்படைய வழிவகுக்கும் வெண்தாடி வேந்தரை வன்திகழ்தோடு நோக்கி ஆளும் அந்நியர்களை அனல்வீசும் கண்களோடு பார்க்கிறது. திரண்ட செல்வத்தைச் சுரண்டுவதோடுமட்டுமின்றி திராவிடத்தையே நிர்மூலமாக்கத் துணிந்த தூர்த்தர்களைத் துரத்த அடிஅடித்து நிற்கிறது. உன்னத நிலைக்கு உயர, உலக சமுதாயங்களில் ஒப்பற்ற இடம் பெற அறிவின் வழியதாய் நெறிமுறை கொண்டு தொண்டாற்ற துவங்கிவிட்டது. குன்றிய வீரம் குமுறியே தீரும். மங்கிய மதி பொங்குவது இயற்கை.

எல்லா துறைகளிலும் புரட்சி பூத்தாலன்றி திராவிடம் திருந்துவது முடியாது. விழிப்படைந்த திராவிடம் செய்ய வேண்டிய வேலைகள் பலவுள என்பதை உணருகிறது. மொழி, கலை, நாகரீகம் ஆகிய சமுதாயத் துறையில் சரிந்த நிலையிலும், பொருளியல் துறையில் புதைந்த நிலையிலும், அரசியலின் அடிமையிலும் கிடந்து உழல்வதை உணர்கிறது. மொழிக்கு முதலிடம் கிடையாது. அரசியலில் ஆங்கிலம், சமுதாயத்தில் சமஸ்கிருதம். எந்த மொழியானாலாவது, பல்லைப் பண்டிதனார்வது சீர்கேடான இந்த நிலைமையைச் சிந்தித்துப் பார்த்தது கிடையாது. வடநாட்டு இந்தியைச் செந்தமிழ்நாட்டில் கட்டாயப்பாடமாக்கியது ஆரிய ஆணவ ஆட்சி. அதனை எதிர்த்தனர் வீரத்திராவிடர்கள். கொலைக்கள் கூடாமடிக்கும் சிறைச்சாலையை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக்கிய பெரியார் இராமசாமியைப் பின்பற்றி அணி அணியாகப் புறப்பட்டு அழித்தே தீருவோம் ஆரிய இந்தியை என்று எக்காளமிட்டு இரு வீரர்களின் சவங்களைக் காணிக்கையாகக் கொடுத்து விரட்டினர் பாரத மாதாவின்மாற் வைப்பெரழிவினை. விரட்டியவர் வேறு யாருமில்லை, தன்மானவுணர்ச்சி தமிழர்களே. ஆனால், தமிழுக்கே தாங்கள் தான் தர்மகர்த்தாக்களென்று தலைதட்டி எண்ணி இதம் பூதெப்பி வாழும் புலவர் கூட்டம் "எமது உடல்நிலை ஒத்துவராது; யாம் சிறைக்கோட்டம் நண்ணோம்" என்றனரே மொழிப் போராட்டத்தில் புண்டு புகலிடம் தேடினர். இந்த வேடிக்கையான நிகழ்ச்சியைத் திராவிடம் இன்னும் மறக்கவில்லை.

கலையின் நிலை கருத்தையே கலக்குகிறது. மக்கள் வாழ்க்கையின் காலக்கண்ணாடி கலை; மக்கள் மனப்பண்பு கலை; சமுதாய சரித்திரக்கோட்டம் கலை. இப்படியிருக்கவேண்டிய கலை, ஆரிய உயர்வுக்கு உழைத்து உழைத்து உருமாறி வந்துளது. அந்தக் கேவல நிலைக்கு ஆக்கமளிக்க திராவிட மக்களே, அதிலும் படித்த கூட்டமென்று பாருமொழி பேசும் பட்டதாரிகளே பாய்ந்து வந்தால் அவர்களை என்னென்பது. கம்பராமாயணம், கழுதைப் புராணம் ஆகிய எல்லாவற்றிலும் கடவுளரின் காமக் கூத்தும், கண் மூடித்தனமுமே காட்சியளிக்கின்றன. அதின் அழிவு வேலைக்கே இவை ஆக்கமளிக்கின்றன. ஆகவே, திராவிடர் தம் கலை, உண்மை திராவிடக் கலையாக விளங்கவேண்டுமானால், என்றும் நிலைத்து வாழும் கலையாக வேண்டுமானால், ஒப்பற்ற கலையாக விருக்க வேண்டுமானால், அதன் மேல் படர்ந்துள்ள ஆரிய மாசினை உடனே அப்புறப்படுத்தியாக வேண்டும். ஆகவே, திராவிடர் ஒரு கலைப் புரட்சியை எதிர்நோக்குவதில் வியப்பில்லையல்லவா?

பொருளாதாரத் துறையில் மனியர்களுக்கும் நாய்களுக்கும் பணியமுடியாது. மேல், கீழ் நாடுகளின் எந்தப்படி ஆனாலும் இனி திராவிடம் இயங்கமுடியாது. அரசியலில் ஆங்கிலேயருக்கும் அவருக்கு

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# ஆர்தர் ஹோப் கூட்டு இயந்திரத் தொழிற்சாலை

## மோட்டார் மன்னர் ஜி. டி. நாயுடுவின் முயற்சி

### மே. த. கவர்னர் திறந்துவைத்தார்

கோயமுத்தூரில் பிரபல தொழில் நிபுணராய் இருக்கும் தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் "ஆர்தர் ஹோப் கூட்டு இயந்திரத் தொழில்" என்ற பெயரால் ஆரம்பித்துள்ள போதனா முறைப்பள்ளிக்கூடத்தை 23-2-45ந் தேதி மாலை மேன்மைதங்கிய கவர்னர் திறந்துவைத்தார்.

இந்த திறப்புவிழா வைபவம் தோழர் ஜி. டி. நாயுடுவின் பங்களாவான 'கோபால் பாக்'கில் நடந்தது. மேன்மை தங்கிய கவர்னர் விழா நடக்கும் ஸ்தலத்திற்கு வந்ததும் தோழர் ஜி. டி. நாயுடு முகமன் கூறி வரவேற்றார். புதிதாக திறக்கப்பட்டுள்ள இப்பள்ளிக்கூடம் மோட்டார், ரேடியோ இஞ்சினீயரிங் கலைகளைப் பயிற்றுவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

### தோழர் ஜி. டி. நாயுடு

பள்ளிக்கூடத்தைத் திறந்துவைக்கும்படி மே. த. கவர்னரைத் தோழர் நாயுடு கேட்டுக்கொள்ளும்போது கூறியதாவது:-

"இந்நாட்டின் எதிர்காலம் கைத்தொழில் பரவுவதைப் பொருத்திருக்கிறது. கைத் தொழில் கல்வி வளராவிட்டால், இந்நாடு அழிய நேரிடும். வார்தா கல்வித் திட்டமோ சார்ஜண்ட் கல்வித் திட்டமோ இந்த இலட்சியத்தை நிறைவேற்றக்கூடியதாயில்லை; இளைஞர்களுக்கு வாழ்க்கையில் பயனளிக்கக் கூடிய கல்விதான் இந்நாட்டுக்கு ஏற்றது. இன்றைய கல்வியில் இத்தகைய பலனை எதிர்பார்க்க முடியாது.

இன்று உலகம் விஞ்ஞானத்தின் உச்ச நிலையையடைந்திருக்கிறது. வேகத்திலும், திறமையிலும், மொத்தமாக உற்பத்தி செய்வதிலும் உலகம் முன்னேற்றமடைந்திருக்கிறது. இந்நிலையில், இந்நாட்டில் ஒரு சிலர் [illegible] பழமைக்காலத்திற்கு அழை[illegible]வது சர்க்கா காலத்திற்கும், கட்டவண்டி காலத்திற்கும், கையினால் காகிதம் செய்யும் காலத்திற்கும், பனை ஓலையில் எழுதும் காலத்திற்கும் கொண்டு செல்ல முயலுவதின் கருத்து என்ன என்பது விளங்கவில்லை.

தற்கால நவீன உலகில், மோட்டார், ரேடியோ இஞ்சினியரிங் கல்வி முறை மிகமிக முக்கியம் வாய்ந்ததாக விளங்குகிறதென்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இவ்விரண்டு கலைகளும் எதிர்காலத்தில் வளர்ந்து பெருகுவதற்கு பயிற்சிபெற்ற மாணவர்கள் தேவை. அவர்களே இத்தொழிற் கலையை வெற்றிகரமாக நடத்திவைக்க முடியும். இக்கல்வி முறையே, அதாவது மோட்டார் கைத்தொழில் 3 வருஷமும், ரேடியோவில் 2 வருஷமும் பயிற்சியளிக்கப்படும். இந்த சாலைக்கு வேண்டிய கருவிகளையும் சாதனங்களையும் சர்க்காரிடம் ஒப்புவித்துவிடுகிறேன். இச்சாதனங்கள் யாவும் மேல் நாடுகளில் அதாவது இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் என்னால் பொறுக்கியெடுக்கப்பட்டவைகள். இவை ஒரே காலத்தில் பல பிரிவுகளாகப் பிரித்து 60 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கக்கூடிய அளவுக்கு இருக்கின்றன. இங்குள்ள கருவிகளையும் இயந்திரங்களையும் கொண்டு மேல்நாடுகளில் 6-வருடம் பிடிக்கும் பயிற்சியை இந்த சாலையில் 3 வருடத்தில் அளித்துவிடலாம் என்று கருதுகின்றேன்.

யு எம். எஸ். புத்தகாலயத்தையும் இந்த சாலைக்கு நன்கொடையாக அளிக்கிறேன். இந்த புத்தகசாலைக்கு கடந்த 20 ஆண்டுகளாக புத்தகங்கள் சேகரித்து வந்தேன். இப்புத்தகசாலையை, கோவை நகரசபைக்கு அளிக்க முன்வந்து எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். காங்கரஸ்காரர்கள் நகரசபையைக் கைப்பற்றியிருந்ததினால், அரசியல் கருத்து வேற்றுமையின் காரணமாக எனது நன்கொடையை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள். வருடமொன்றுக்கு நிர்வாகச் செலவு ரூ. 3000 லிருந்து ரூ. 4000 ஆகும். இது சர்க்காருக்குப் பெரும் சுமையாகாது என்றே கருதுகிறேன்."

### மே. த. கவர்னர்

பயிற்சிசாலையை மே. த. கவர்னர் திறந்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"என் பெயரால் இச் சாலை ஏற்படுத்தியதைக் காண நான் பெரிதும் மகிழ்கின்றேன். இம்மாதிரி பயிற்சிசாலைக்கு என் முழு ஆதரவையுமளிக்கிறேன். இந்நாட்டில் இத்தகைய சாலைகள் மிகக் குறைவு. இப்பொழுதாவது இக்கல்வியின் அவசியத்தை, தாராள சிந்தையும் பெரும் நோக்கமுள்ள தோழர் ஜி. டி. நாயுடு போன்றார் உணர ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இதுவிஷயத்திலும் இதுபோன்ற பிற காரியங்களிலும், நாயுடு தம் கொடைக்கரத்தால் வழங்கிய தாராளமான உதவிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

யுத்தத்திற்குப் பின் திட்டம் வகுப்பதில் ஒவ்வொரு நாடும் முனைந்து நிற்கின்றன. சென்னை மாகாணமும் இதன் அவசியத்தை உணர்ந்திருக்கிறது என்பதை இவ்விழாவிலிருந்து தெரிந்துகொள்ளலாம். மக்களின் வாழ்க்கையை உயர்த்த என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து வருகிறோம்.

பணம் படைத்தவர்களின் தாராள ஒத்துழைப்பு இருக்குமானால், இனியும் பல காரியங்கள் செய்ய முடியும் என்று நம்புகின்றேன்.

போர் நிலை [illegible]திற்கு முன்பாகவே மாறிப்போய்விட்டது. ஒவ்வொரு நாட்டிலும் காலசக்தியின் வளர்ச்சி விரைவாக நடந்துகொண்டு வருகிறது. கால மாறுதலை தோழர் நாயுடு போன்றவர்கள் உணர்ந்து ஆவன செய்வதை ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்த நான் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

கால மாறுதலென்பது என்ன? பழக்கவழக்கங்களை மாற்றுவது; புதம்புதிய வழியை ஏற்படுத்துவதற்கான நிலையில் மாற்றங்களை உண்டாக்குவது என்று பொருள். இந்தப் போரினால் பெரிய எதிர்கால சுபிட்சங்கள் ஏற்பட்டுள்ளன. சிலர் தங்கள் கொடைக்கரத்தால் பொற்காசுகளை [illegible] தங்கள் நாட்டுப்பற்றைக் காட்டு[illegible]

கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் எதுவும் செய்யாது உள்ளனர் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்."

கடைசியாக போர் கடனுக்குப் பணந்தந்து உதவும்படி கேட்டுக்கொண்டு மேலும் குறிப்பிட்டதாவது:

"தோழர் நாயுடு தற்போது போர் கடன் பத்திரங்களில் 12-லட்சம் ரூபாய் முடக்கிவைத்திருப்பது கண்டு களிப்படைகின்றேன். நாயுடுவின் உதாரணங்களை மற்றவர்களும் பின்பற்றுவார்கள் என்று நம்புகின்றேன்.

கோயமுத்தூருக்கு மற்ற ஊர்களைவிட அதிகம் விஜயம் செய்திருக்கிறேன். மீண்டும் இங்கே வருவேனா என்பது எனக்குத் தெரியவில்லை. இது கடைசி விஜயமாயிருக்குமானால் உங்களுடைய தாராள சிந்தை கவர்ன்மெண்டுடன் ஒத்துழைப்பு இவைகளுக்காக நான் நன்றி செலுத்துகிறேன். இந்த சாலையை ஏற்படுத்திக் கொடுத்ததற்கும், புத்தகாலயம் கொடுத்ததற்கும் தோழர் நாயுடுவுக்கு நன்றி பாராட்டுகிறேன்."

சாலை திறந்துவைக்கப்பட்ட பிறகு தோழர் நாயுடு மே. த. கவர்னருக்கும் வந்திருந்தவர்களுக்கும் தேநீர் விருந்தளித்தார்.

## தோழர் ஆரோக்கியசாமி மறைவு

சென்னை சுயமரியாதை இயக்கப் பிரமுகரும், ஜில்லா திராவிடர் கழக உறுப்பினருமான தோழர் ஆரோக்யசாமி அவர்கள் மன்னடி சவுரிமுத்து செருவிலுள்ள தமது இல்லத்தில் 25-2-45 ஞாயிறன்று காலமானார். பிரேத அடக்கத்திற்குப் பல பிரமுகர்கள் வந்திருந்தனர்.

## பிரிவு உபசாரம்

கோவில்பட்டி: வழக்கறிஞர் தோழர் வி.எம். சுப்பையாபிள்ளை பி.ஏ.,பி.எல்., ரிட்டையர்டு ஆகி தம் ஊர் செல்வதை முன்னிட்டு ஷையூர் திராவிடர் கழகத்தின் சார்பாக தோழர் என். சங்கரலிங்க ரெட்டியார் பி.ஏ.,பி.எல்., தலைமையில் 16-1-45-ந் தேதி பிரிவு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

---

சென்னை சுயமரியாதைச்சங்க நிதிக்காக

29-4-45 ஞாயிறு மாலை 6 மணிக்கு செயிண்ட்மேரீஸ் மண்டபத்தில் தளபதி C.N. அண்ணாதுரை M.A., (காஞ்சி திராவிட நடிகர் கழகத்தினர்) நடிக்கும்,

## சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்

நாடகம் நடைபெறும்.

டிக்கட்டுகள்:
ரூ. 5-8-0, 2-4-0, 1-2-0, அணா 9.
(வரியுடன்)

குறைந்தது 10 ரூபாய் நன்கொடை அளிப்பவர்களுக்கு மட்டுந்தான் ரிஸர்வ்சீட் (தனியிடம்) உண்டு. வெளியூர்த் தோழர்களுக்குத் தனியிடம் வேண்டுமானால், தயவுசெய்து, இன்றே என். வி. நடராசன், காரியதரிசி, சுயமரியாதைச் சங்கம், 18. பெருமாள் முதலி தெரு பெத்துநாயக்கன்பேட்டை, ஜி. டி. சென்னை என்ற முகவரிக்கு எழுதவும். கொஞ்சம் இடந்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. முந்துங்கள்.

சென்னையில் கீழ்க்கண்ட இடங்களிலும், மற்ற முக்கிய தோழர்களிடமும் டிக்கட்டு கிடைக்கும்.

பி. ஏ. கே. பழனிச்சாமி பருப்பு வியாபாரம், 20. கிரேன் கார்டன் 3-வது சந்து, இராயபுரம்.

என். எம். சுப்ரமண்யம், 50. நாராயணப்ப நாயக்கன் தெரு, வண்ணை.

டி. மகாதேவன், நியூஸ் பேப்பர் மார்ட், சுமைதாங்கி, தங்கசாலைத் தெரு.

செல்லம் அண்டு சன்ஸ் ஜவுளி வியாபாரம், தேவராஜ்முதலி தெரு, பார்க் டவுன்.

எம். எஸ். பதி, புத்தக வியாபாரம், அப்பா பில்டிங்ஸ், சைனா பஜார் தெரு.

சி. தங்கராஜ், 41. ஜுக்ஸ் ரோட், ஓட்டேரி, பெரம்பூர் பாரக்ஸ்.

எஸ். வி. சாமி, 59. கார்னீஸ்வரர் கோயில் தெரு, மைலாப்பூர்.

---

## சென்னை மாவட்ட திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாடு

1-4-45 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் ஆரம்பம்-

தலைவர்: திருச்சி நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் என். சங்கரன்.

திறப்பாளர்: குமாரபட்டக்கார் தோழர் என். அர்ஜுனன்.

கொடியேற்றுபவர்: தோழர் பேரளூர் சுப்ரமண்யம்.

வீரர்கள், தாலமுத்து-நடராசன் படத்திறப்பும் நடைபெறும்.

தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொள்வார்கள்.

வரவேற்புக்கட்டணம் ரூபாய் 1, பிரதிநிதிகள் கட்டணம் அணா 8. விசிட்டர்களுக்கு இலவசம்.

தோழர்கள் என். ஜீவரத்தினம், வரவேற்புத்தலைவர், டாக்டர் சி. கணேசம் விளம்பர அதிகாரி, எம். கிருஷ்ணன், எம். கே. டி. சுப்ரமண்யம் காரியதரிசிகள்.

## நெருப்புக் குழியிறங்கல்

20-2-45-ல் கருவூர் காமாட்சி அம்மன் திருவிழா நடைபெற்றது. அது சமயம் சில சூழ்ச்சிக்காரர்கள் "கடவுள் இல்லை என்று சாதிக்கும் சுயமரியாதைக்காரர்கள் நெருப்புக் குழியில் இறங்கட்டும் பார்ப்போமென்று" சொல்ல திராவிட இயக்கத் தோழர்களில் 7 பேர் 'சூழ்ச்சி ஒழிக' என்ற ஒலிகளுடன் இறங்கினர்.

---

## மறுமணப்பெண் தேவை

கௌரவம் வாய்ந்த மிராசுதாரரும், நாற்பது வயதுடையவரும், ரூ 20,000 (இருபதினாயிரம்) ஆஸ்தியுடையவரும், மாதமொன்றுக்கு ரூ 75 (எழுபத்தைந்து) வருமானமுள்ளவரும், தமிழ்க் கல்வியறிவுடையவரும், ஒழுக்கத்தில் சிறந்தவருமான, தன்மான இயக்கத் தோழருக்கு மறுமணப்பெண் தேவை.

மறுமணப்பெண், கூடுமானவரை கல்வியறிவுடையவராகவும், வயது 30க்கு மேற்படாமலும், உடல் நலமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு இயலுமேல் உருவப்படத்துடன் வரையவும். கடிதப்போக்குவரத்து பாதுகாக்கப்படும்.

X C/o இரா. நல்லடி, செயலாளர்,
திராவிடர் கழகம்,
மேஷூர், (சேலம்)

# - கனவு -

(கஜேந்திரன்)

ஆலிவர் கோல்டு சுமித் எனும் ஆங்கிலப் புலவர் பெருமகனார் கீழ்வரும் பொன்மொழிகளைப் பகன்று மறைந்தார்:

"Why, why was I born a man and yet see the suffering of the wretches I cannot relieve! Why was this heart of mine formed with so much sensibility! Or why was not my fortune adopted to its impulse! Tenderness without a capacity of relieving, only makes the man who feels it more wretched than the object which sues for assistance."

இந்தப் பொன்மொழிகளைக் கருத்திற்கொண்டவண்ணம் உறக்கத்தில் ஆழ்ந்தேன்.

மாலை அந்திநேரத்தில் கதிரவன் தன் கிரணங்களை அடக்கி மேற்கில் மறைந்தனன். பட்சியினங்கள் தத்தம் கூடுகளை நாடிச்சென்றுகொண்டிருந்தன.

நான் என் மேல்மாடியில் நின்றுகொண்டு சாளரத்தின் வழியாக வீதியை நோக்கிக்கொண்டிருந்தேன். என் வீட்டிற்கெதிரில் ஒரு குடிசை இருந்தது. அந்தக் குடிசையில் ஒரு குறப்பெண்ணிருந்தாள். அப்பெண் தன் கையில் ஒரு குழவியை வைத்திருந்தாள்; அக்குழவிக்கொரு துன்பமுண்டு. அதுதான் பசித் துன்பம். பசிக்கொடுமையால் ஏழை படும்பாட்டை விவரித்தல் எட்டிலடங்காது!

அக்குழந்தையோ பசியால் கூக்குரலிட்டது. அக்காரிகையின் சமாதானம் பயன்படவில்லை. அவள் தன் துணைவன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். நேரம் நத்தை போல் நிதானமாகச் சென்றுகொண்டிருந்தது.

கையில் ஒருகாசுமில்லாது அவள் கணவன் இல்லிற்கு வந்து சேர்ந்தான். அதனை அவன் முகக்குறிப்பால் உணர்ந்தாள் நங்கை. கணவனுக்குத் தகுந்த பணி செய்தாள்; அவனும் தான் சுற்றியலைந்தும் ஒரு வேலையும் கிடைக்காததைக் கூறினன். அதே காலத்தில் குழந்தை வீறிட்டழுதது. கணவன் அவ்வழுகையின் காரணம் கேட்கக் காரிகை கூறினள்.

அவன் மனம் வாடிற்று; இரண்டு துளி கண்ணீர் வடித்தான். 'விதி' யென்று மதிபிழந்து பேசினன்; 'யாது செய்துமென் பயன்' என்று ஏங்கினன். குழந்தையின் கூக்குரல் அதிகரித்தது. மனம் வருந்திய அவன் எங்காகிலும் சென்று ஒரு காட்டாளையிடம் கடன் வாங்கி வரலாமென்று வெளியே எழுந்து வந்தான்.

விதியை நொந்து கொண்டே வீதியைக் கடந்தான். அவசரமாக மனைவியும் அவன் பின்னிருந்து அவனைக் கூவியழைத்தாள்; திரும்பி நோக்கி விரைவினில் தன் வீட்டையடைந்தான். கூக்குரல் அதிகரித்தது—காரணம் என்னை? அக் குழந்தை மாண்டது. என் மனமும், கண்களும் அதற்குமேல் அக்கோரக் காட்சியைக் காண மறுத்தன. ஆகையால் என்னிரு கண்களையும் மூடிக்கொண்டு திரும்பி ஓடிப்போக நினைத்தேன்; விழித்துக் கொண்டேன்.

ஐயகோ! கண்டது கனவேயாயினும், திராவிடத் திருநாட்டின் தீனமான இழிநிலை யன்றோ யான் காணலுற்றது! யானே ஓர் ஏழையாய் இருக்கும்போது, யான் என்ன செய்யக் கூடும்? அப்போது தான், "சோகக் காட்சிகளைக் கண்டு மனமுருகும்படியாகவும் பிறர் துயரத்தை அகற்ற சக்தியற்றவனாகவும் நான் ஏன் பிறந்தேன்?" என்ற கோல்டு சுமித் (Goldsmith) கூறிய பொன் மொழிகளின் கருத்து எனக்குத் தெற்றென விளங்கிற்று.

அஜாக்கிரதையாகப் பேசுவதை
நிறுத்தி
போராடும் நமது வீரர்களுக்கு
பாதுகாப்பளியுங்கள்

★

"துருப்புகளின் சௌகரியத்திற்கு"
என்று
குறிப்பிட்டு

மே. த. கவர்னர்
யுத்த நிதிக்கு
மீண்டும் பணம் கொடுத்துதவி
அவர்களுக்கு நலன்
தேடுங்கள்.

## திருமண சொற்பொழிவு

சென்னை, பிரம்பூர், மாதவரம் ஐரோட், திருவள்ளூர் புரம் வீதி 3-ம் எண் இல்லத்தில் (4-3-45) ஞாயிறு காலை 7-30 மணிக்கு மேல் செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்களின் தலைமையில் தோழர்கள் எஸ். வி. கணேசம் பி. சண்பகவல்லி ஆகியவர்களுக்குத் திருமணம் நடைபெறும்.

அதுசமயம் திராவிட நாட்டுத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும் தோழர்கள் கே. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) என். வி. நடராசன், மகாமதுரகவி வி. வி. முருகேச பாகவதர் ஆகியோரால் சொற்பொழிவு நடைபெறும்.

குடி அரசு

1945-ம் மார்ச்சு-மீ 3-உ

# சர் R. K. S.

சர் R. K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் புதுக்கட்சியை ஏற்படுத்த முயற்சிப்பதும், அதற்கு ஜஸ்டிஸ்கட்சி என்று பெயர் கொடுக்கப்பார்ப்பதும், அவரைப் பல தோழர்கள் ஆதரிப்பதும், மற்றும் பலவிதமான காரியங்கள் நடந்துவருவதும் ஏன் என்பதும் எதற்கு ஆக என்பதும் இப்போது அதாவது சர் ஷண்முகம் செட்டியார் அவர்கள் சென்னையில் சமீபத்தில் சர்வகலாசாலையில் பேசிய பேச்சிலிருந்து மக்களுக்கு விளங்கி இருக்கலாம்.

என்னவென்றால் சர் ஆர். கே. எஸ். அவர்கள்,

இந்தியா ஒரு நேஷன் (ஒரு தேசம்) என்றும், இந்தியா துண்டாக்கப்படக்கூடாது (அதாவது பாக்கிஸ்தான் திராவிடநாடு ஆகிய தனி பிரிவினைக்கூடாது) என்றும் இனத்தின்பேரால், மொழியின் பேரால், மதத்தின் பேரால், மனித சமுதாயம் பிரிக்கப்பட்டு அதற்கு ஏற்றபடி நாடுபிரிக்கப்படுவதுகூடாது என்றும் சொல்லிவிட்டார்.

சரித்திர காலமாக இந்தியா ஒரே நாடாக இருந்துவருகிறது என்றும் இது இயற்கை அமைப்பு என்றும் காட்டுகிறார்.

இது எவ்வளவு அதிசயப்படத்தக்க சேதி என்பதை நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை. இந்தியா ஒரு நாடு அல்ல, திராவிட நாடு, பாக்கிஸ்தான் தனிநாடுகளாகப் பிரிக்கப்படவேண்டும், ஆரிய திராவிட இனங்கள் வெவ்வேறு இனங்களாகும் என்கின்றவையான இந்தப் பிரச்சினைகள் இன்றைக்கு 5, 6 வருஷங்களுக்கு முன்பிருந்தே ஆகாயமுட்ட ஊசலாடிக்கொண்டிருந்து வந்து இந்தியா முழுவதிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்து எல்லா அரசியல்வாதிகளுடையவும், பொது வாழ்வில் ஈடுபட்டிருந்த மக்களுடையவும் கவனத்தை இழுத்து நிற்கின்றதான ஒரு முக்கியமான பிரச்சினையாகும்.

அதோடு கூடவே இந்தப் பிரச்சினைகளில் கலந்து தொண்டாற்றி வந்த மக்களோடு கூடி குலாவிக் கொண்டே இருந்துவந்திருக்கின்றவராவார் சர் ஷண்முகம் செட்டியார் அவர்கள்.

அப்படி இருக்க இவைகளுக்கு விரோதமாக இன்று திடீரென்று வெளிவந்து ஒரு பெரிய வெடிகுண்டைப் போட்டு இந்தப் பிரச்சினை கிளர்ச்சிகளையும், உணர்ச்சிகளையும் அழிக்க முன்வந்து இருக்கிறார் என்றால் இதற்கு என்ன கருத்து கொள்வது?

இதுவரை சர் செட்டியார் அவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும், எந்த இடத்திலும் இந்தப் பிரச்சினைகளுக்கு விரோதமாக ஒரு வார்த்தைகூடப் பேசியதாக நமக்குத் தெரியவில்லை. ஆதலால், இந்த அபிப்பிராயங்கள் இவருக்கு முன்பு இருந்தே இருந்துவந்தவைகளா?, அல்லது இப்போதுதான் கொள்ளப்பட்டவைகளா என்பது யோசிக்கத்தக்க மற்றொரு விஷயமாகும்.

எப்படி இருந்த போதிலும் சர் ஷண்முகம் செட்டியார் அவர்கள் திராவிடக் கழகம் என்னும் ஜஸ்டிஸ்கட்சியில் இருக்க முடியாமல் போய் புதியக் கட்சியை ஏற்படுத்தவேண்டிய அவசியம் என்ன என்பதற்குக் காரணம் இந்த இந்தியா துண்டு போடக்கூடாது என்கின்ற இந்திய தேசியமும், இனத்தின் பேரால் அரசியல் இருக்கக்கூடாது என்கின்ற உலக அரசியல் தத்துவமும் தான் என்பது யாவருக்கும் விளங்கி இருக்கலாம்.

இதற்கு நாம் சமாதானம் சொல்லவேண்டியது அவ்வளவு அவசியமா என்றே இப்போது கருதுகிறோம்.

எதிர்கட்சிக்காரராகிய காங்கரசுக்காரர்களும், காந்தியாரும், டாக்டர் இராஜகோபாலச்சாரியார் அவர்களும்கூட இவ்வளவு இந்திய தேசியம் காட்டவில்லை. பிரிட்டிஷாரும் கூட பிரிந்து கொள்ளலாம் என்றும், இந்தியா ஒரு தேசமல்ல அது ஒரு உபகண்டம் என்றும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் திராவிடநாட்டைப்பற்றியும், திராவிட இனத்தைப்பற்றியும் இது தனித்த ஆட்சி உடையதாயிருக்கவேண்டுமென்பதைப்பற்றியும், நாமும் மற்றும் பல அறிஞர்களும் பொதுநல சேவையில் ஈடுபட்டவர்களும் சொல்லிவந்த ஆதாரங்களுக்கு இதுவரை வேறு எவரும் மறுப்போ சமாதானமோகூட சொல்லாமல் இருக்கும் இந்த நிலையில் நம்மில் ஒருவராய் அதுவும் பிரதானப்பட்டவருள் ஒருவராய் கருதிவந்த ஒருவரால் இன்று திடீரென்று சொல்லப்பட்ட கருத்துக்கள் நமக்கு எவ்வளவு பலவீனத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்பது தான் முக்கியமாய் கருதப்படவேண்டியதாகும். ஆனாலும் திராவிட நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி துவக்க காலத்தில் யார் யார் இதற்கு அனுகூலமாகஇருப்பார்கள்யார்யார் இதற்கு எதிர்ப்பாய் இருப்பார்கள் என்பதைப் பற்றிய சிந்தனை ஒன்றும் இல்லாமல், அந்தப் பிரச்சினை தோன்றுவதற்கு அவசியமாயிருந்த பலமான காரணங்களைக் கொண்டும் அக்காரணங்களை ஒழிக்கவேண்டும் என்பதின் மீதுள்ள கவலையின் பலத்தைக் கொண்டுமே பலாபலனை இயற்கைக்கு விட்டு துணிந்துகொண்ட ஒரு அபிப்பிராயமேயாகும்.

ஆதலால் மற்றவர்கள் எதிர்ப்பும் ஆதரிப்புமே திராவிட நாடு பாக்கிஸ்தான் பெறாமல்போவதற்கும் பெறுவதற்கும் முக்கிய துணையாய் இருந்துவிடாது என்கின்ற எண்ணம் நமக்கு உண்டு.

சர் ஷண்முகம் செட்டியார் அவர்கள் கருத்து நமக்கு எப்படி இருந்தாலும் அவர் அதை வெளியாக்கிவிட்டதற்கு தமிழ் மக்கள் அவருக்கு நன்றிகாட்ட கடமைப்பட்டவர்களாவார்கள்.

நிற்க அவரது அன்றையப் பேச்சில் நாம் அதிசயப்படக்கூடிய மற்றொரு சங்கதி என்னவென்றால்,

“இந்தியப் பிரச்சினை முடிவுபெற அமெரிக்கா, சீனா, ரஷ்ய தலைவர்களை பஞ்சாயத்தாராய் நியமித்து அவர்கள் தீர்ப்புக்கூற வேண்டும்” என்பதாகும்.

ரோஜா முத்தையா

இது சர் ஷண்முகம் செட்டியார் போன்றவர்களிடமிருந்து எதிர் பார்க்கக்கூடிய அபிப்பிராயம் என்றால் இதைவிட அதிசயமான சங்கதி வேறு ஒன்று இருக்க முடியாதென்றே கூறுவோம்.

இந்தியாவைப் பற்றி (இந்தியாவில் உள்ள தன்மைகளைப் பற்றி இந்தியப் பிரச்சினை பற்றி) இவர்களுக்கு என்ன தெரியும்? இவர்களை நாம் எப்படி நம்ப முடியும்? இவர்கள் பிரிட்டிஷார்களின் தயவு தாட்சண்ணியத்திற்கு கட்டுப்படாமல் நடுநிலையில் இருந்து தீர்ப்புக் கூறி தீர்ப்பை நடத்திக் கொடுக்கத்தக்க நிலைலய உடையவர்களா? நமக்காவது இவர்களுடைய யோக்கியதை நன்றாகத் தெரியுமா? இந்தியர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நம் எல்லோருடைய தேவையும் இலட்சியமும் ஒன்றுபோன்றதா?

இந்தியாவுக்கு ஆக இந்தப்பஞ்சாயத்தாரிடம் ஒரு பிராது கொடுப்பதாய் இருந்தால் அந்தப்பிராதில் யார் யார் கையெழுத்துப் போடுவார்கள்? திராவிட மக்கள் சம்மதிப்பார்களா? திராவிடர்களை லட்சியப்படுத்த வேண்டியதில்லை என்றால் ஆதிதிராவிட மக்கள் கையெழுத்துப் போடுவார்களா? அவர்களையும் லட்சியப்படுத்த வேண்டியதில்லை என்றால், முஸ்லிம்கள் கையெழுத்துப் போடுவார்களா? முஸ்லிம்களையும் லட்சியம் செய்யவேண்டியதில்லை என்றால் இந்து மகாசபையார் கையெழுத்துப் போடுவார்களா? இவர்களையும் லட்சியம் செய்யவேண்டியதில்லை என்றால் மற்றும் வேறு யார் இருக்கிறார்கள் பிராதுகொடுப்பதற்கு?

காந்தியாரும் சர் ஷண்முகமும் கையெழுத்துப் போட்டு விட்டால் அது 45 கோடி மக்களின் பிரதிநிதியாகப் போட்ட பிராதாக அந்த மூன்று ஜட்ஜிகள் ஒப்புக்கொள்ளுவார்களா?, என்றெல்லாம் பார்த்தால் என்ன பதில் கிடைக்கும்?

பொதுவில் இதுபோன்ற ஒரு பேச்சு சர் ஷண்முகஞ் செட்டியார் அவர்களிடமிருந்து இதுவரை யாருமே கேட்டிருக்கமாட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இயற்கையின் கோலம் இன்னும் என்ன என்ன செய்யுமோ?

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 3-3-45ந் தேதி வரை 29165 அங்கத்தினர்கள் ரூ.2900—12—0 சந்தா

மார்ச்சு மாதம் 3ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் இரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 4848 | 9. வட ஆற்காடு | 1571 |
| 2. தஞ்சை | 4776 | 10. மதுரை | 1328 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 660 |
| 4. திருச்சி | 3834 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 168 |
| 5. இராமநாதபுரம் | 1935 | 13. இலங்கை | 165 |
| 6 திருநெல்வேலி | 1886 | 14 பெங்களூர் | 158 |
| 7. சென்னை | 1700 | 15. புதுக்கோட்டை | 59 |
| 8. தென் ஆற்காடு | 1617 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 29165. சந்தா ரூ 2900-12-0.

## தோழர் ஜி. டி. நாயுடுவின் முன்மாதிரி

உலகில் இந்தியாவைப் போல் இவ்வளவு இழிவான நிலையில் வேறு எந்த நாடுமில்லை. மற்ற நாடுகள் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்கையில், இந்நாடு மட்டும் இவ்வளவு பின்னணியிலிருந்து வருவதற்கென்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டாமா? அவ்வாறு எண்ணிப் பார்த்தால், மற்ற நாடுகளில் அந்நாட்டு மக்கள், கால மாறுதலை உணர்ந்து அதற்கேற்றபடி தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றி அமைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்; நம் நாட்டில் மட்டும், கிணற்றுத் தவளைபோல் கால மாறுதலில் சிறிதும் கருத்துச்செலுத்தாமல் பழமையை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வருகிறார்கள். இதனை, மேன்மை தங்கிய சென்னை கவர்னர் பெருமான் சென்ற வாரத்தில் கோவையில், "ஆர்தர் ஹோப் கூட்டு இயந்திர தொழிற்சாலை"யைத் திறந்து வைக்கையில், நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார்.

"ஒவ்வொரு நாட்டிலும் கால சக்தியின், வளர்ச்சி விரைவாக நடந்துகொண்டு வருகிறது.

"காலமாறுதலென்பது என்ன? பழக்க வழக்கங்களை மாற்றுவது? புத்தம் புதிய வழியை ஏற்படுத்துவதற்கான நிலையில் மாற்றங்களை உண்டாக்குவது என்று பொருள்.

"இக்காலமாறுதலை தோழர் ஜி. டி. நாயுடுபோன்றவர்கள் உணர்ந்து ஆவன செய்வதை ஆங்கிலேய நாட்டைச்சேர்ந்த நான் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்"

என்று கவர்னர் பெருமான் கூறியிருப்பதை ஒவ்வொருவரும் ஊன்றிக் கவனிக்கவேண்டும். இதிலிருந்து விளங்கவில்லையா மற்றநாட்டு மக்கள் காலமாறுதலை யுணர்ந்து தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டிருக்கின்றனர்; அதனால், அந்நாடுகள் முன்னணியிலிருக்கின்றன, முற்போக்கடைந்திருக்கின்றன என்பது.

ஆகவே, இந்நாடு எதிர்காலத்தில் உயிருடன் வாழவேண்டுமானால், உலகில் ஒரு அங்கமாக விளங்க வேண்டுமானால், கால மாறுதலை யுணர்ந்து எத்துறையில் கருத்தைச் செலுத்தினால் நாம் முன்னேற முடியும், நம் நாடு முன்னேற முடியும் என்பதையறிந்து நடந்து கொள்ள வேண்டும்; இல்லையேல், தோழர் ஜி. டி. நாயுடு அவர்

கள், மே. த. கவர்னர் பெருமாளை தாம் ஆரம்பித்த 'ஆர்தர் ஹோப் கூட்டு இயந்திரத்தொழிற்சாலை'யைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொள்ளும் போது,

"இன்று உலகம் விஞ்ஞானத்தின் உச்ச நிலையை யடைந்திருக்கிறது. வேகத்திலும், திறமையிலும், மொத்தமாக உற்பத்தி செய்வதிலும் உலகம் முன்னேற்றமடைந்திருக்கிறது. இதை யுணர்ந்து நாம் இன்று நடந்து கொள்ளவில்லையானால், எதிர்காலத்தில், இந்நாடு அழிவுறும் என்பது நிச்சயம்"

என்று கூறியிருப்பது போல் இந்நாடு அழியாதென்பதில் என்ன சந்தேகம்?

இந்நாட்டில் என்ன செய்கிறார்கள்?

"இந்த நிலையில், இந்நாட்டில் ஒருசிலர் மக்களை பழங்காலத்திற்கு அதாவது சர்க்கா காலத்திற்கும், கட்டைவண்டி காலத்திற்கும், கையினால் காகிதம் செய்யும் காலத்திற்கும், பனை ஓலையில் எழுதும் காலத்திற்கும் கொண்டு செல்ல முயலுகிறார்கள்"

என்று தோழர் ஜி. டி. நாயுடு கூறியிருப்பது முற்றிலும் உண்மை. ஒருசிலர் என்று அவர் யாரை சொல்லியிருக்கிறார். ஒருசிலர் என்பவர்கள் காங்கரஸ்காரர்களே யாகும். இவர்களால் தான், நாட்டில், காலமாறுதலை யொட்டி தங்கள் பழக்க வழக்கங்களையுமாற்றிக் கொள்ளலாம் என்றிருந்த எண்ணமும் போய் விட்டது.

எனவே, உண்மையிலே, இந்நாடும் ஏனைய நாடுகளுடன் போட்டியிட வேண்டும், தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமென்றால் தோழர் நாயுடு அவர்களைப்போல், விஞ்ஞானத் துறையில் கவனத்தைச் செலுத்தி இயந்திரத் தொழிலை வளர்க்க முற்பட வேண்டும். கோவிலின் பேராலும், மடங்களின் பேராலும், கும்பாபிஷேகம், உற்சவங்கள் பேராலும், யாகங்களின் பேராலும் பல லட்சக்கணக்கான பணம் வருஷாவருஷம் பாழாக்கப்படுகிறது. இவையனைத்தும் வீணாக ஆற்றில் கரைத்த புளிபோல் பாழாக்கப்படுகிறது. இது தவிர, கோடிக்கணக்கான பணம் கோவில்களில், மடங்களில் ஒன்றுக்கும் உதவாமல், சோம்பேறிகளுக்கு அடைக்கலமாக விளங்கும்படி குவித்துவைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் மேலும் குவித்தும் வருகிறார்கள். இவ்வாறு செய்வதினால், இந்நாடு என்றாவது உலகில் இதர நாடுகளுடன் போட்டியிட்டு தலை நிமிர்ந்து நிற்க முடியுமா? வாழ முடியுமா? என்பதை எண்ணிப் பாருங்கள். கோவில்களில், மடங்களில் முடங்கிக்கிடக்கும் லட்சக்கணக்கான பணத்தை, பலன்தரத்தக்க முறையில் செல்வம் வளரும் வகையில் இன்று பயன்படுத்த முடியாமல் போனாலும் மேலும் மேலும் அவைகளின் பேரால், லட்சக்கணக்கான பணத்தை முடக்கிவைக்காமலும், வீணாக ஒரு கூட்டத்தார் கொழுக்க விடுக்கிறைக்காமலும், இத்தகைய பொருளீட்டும் துறையில் நாட்டின் முன்னேற்றத்திற்காக இயந்திரக் கல்வியை வளர்ச் செய்யும் துறைகளில்செலவு செய்ய முன்வருவார்களாக. தோழர் நாயுடு அவர்களின் முன்மாதிரியை இந்நாட்டார் இனியாவது பின்பற்றுவார்களாக!

---

## திருச்சி ஜில்லா திராவிட கழக மாநாடு

இம் மாநாடு 11-3-45-ஆம் தேதி நடத்த முயன்று பெரியார் உடல் நலம் கருதியும் தலைமை தாங்கவும், மற்றும் சில பணிகளாற்றவும் அழைக்கப்பட்ட தலைவர்கள் சௌகரியத்திற்காகவும், 8-4-45-ல் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. வரவேற்புக் கழகம் 10-3-45-ஆம் தேதி தோழர் தலைவர் சங்கரன் பிள்ளை அவர்கள் தோட்டத்தில் மாலை 6-30 மணிக்குக் கூடும்.

இ. பெ. வேதாசலம்.

## தஞ்சையில் செல்வம் நாள்

தஞ்சைத் திராவிட வாலிபர் கழகச் சார்பில் 10-3-45 சனி மாலை 6-மணிக்கு, தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., அவர்கள் தலைமையில் தோழர் சி. பி. சிற்றரசு, தோழர் மா. பெரியசாமி மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

கோ. சி. பெரியசாமி புலவர்,
தலைவர், தஞ்சைத் திராவிட
வாலிபர் கழகம்.

## சென்னையில் திருமணம்.

சென்னை "தமிழ் உலகம்" ஆசிரியர் தோழர் பார்த்தசாரதி அவர்கள் புல்வி ராஜேஸ்வரி அவர்கட்கு 1-3-45-ல் திரு வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களால் வைதீக முறைப்படி திருமணம் நடத்திவைக்கப்பெற்றது.

திருமணத்தில் எரியோம்பல் முதலான சடங்குகளைத் தலைவர் நடத்திவைத்தார். தோழர் சாமி சண்முகானந்தா முதலானவர்களும் ஷை காரியத்திற்கு தலைவருக்கு உதவியாய் இருந்து நடத்தினார்கள்.

திருமணத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர். தோழர் இந்திராணி பாலசுப்ரமணியம் அம்மையார், பெரியார் ஈ. வெ. ராமசாமி, சாமிருத்ரகோடீஸ்வரர் முதலானவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனத்துடன் திருமணம் முடிவுற்றது.

## சென்னையில் சர் செல்வம் நாள்

4-3-45 ஞாயிறு மாலை 5-மணிக்கு சூளை கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில் நடைபெறும்.

தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமை வகிப்பார்.

தோழர்கள் கே. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) டார்பிடோ ஜனார்த்தனம் பி. ஏ., (ஆனர்ஸ்) மற்றும் பலர் பேசுவார்கள்.

அனைவரும் வருக!

புரசை (20-வது வட்டம்)
திராவிடர் கழகம்,
சென்னை ஜில்லா
திராவிடர் கழகம்.

## தஞ்சை ஜில்லா போர்டு உபதேர்தல்

### சாமிதுரை தேவர் வெற்றி

தஞ்சை ஜில்லா போர்டு முத்துப்பேட்டை நாச்சிகுளம் ரேஞ்சுக்கு இதுவரை அங்கத்தினராக இருந்த வடாற்காடு தோழர் சுப்பையாத் தேவர் அவர்கள் இறந்து போனமையால் ஷை ஸ்தானத்திற்கு அண்மையில் நடைபெற்ற உபதேர்தலில் ஜாம்புவானோடை தோழர் சாமிதுரை தேவர் அவர்கள் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## கவி முத்துத்தாண்டவர் விழா

தமிழ் இசைப்புலவரும் கவிஞருமான தோழர் முத்துத்தாண்டவரின் நினைவு நாள் சென்ற ஆண்டைப்போல் இவ்வாண்டும் வருகிற எப்ரல் மாதம் 28, 29, 30 ஆகிய தேதிகளில் நம் மாகாணத்திலுள்ள முக்கிய இசைப்புலவர்களையும், தலைவர்களையும் வரவழைத்து உறையூரில் சிறப்பாக நடத்துவது என்று 16-2-45-ல் கூடிய வரவேற்புக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஷை விழாவிற்கு உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து அவ்விழாவை சிறப்பாக நடத்திவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குறிப்பு: வெளியூர் அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தங்கள் நன்கொடையை அனுப்பிவைக்கவும். டி. பி. வேதாசலம், தென்னூர், திருச்சி.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் தற்போதைய முகவரி:

இரா. நெடுஞ்செழியன்,
வார்டன் யு. எம். எஸ் ஹாஸ்டல்,
அவனாசி ரோடு, கோயமுத்தூர்.

பொள்ளாச்சி தோழர் பி. கே. பாபு சாஹிப் 1-3-45 முதல் 7-3-45-ந் தேதி வரை நாகூர், காரைக்கால் முதலிய ஊர்களுக்குச் சென்றுவிட்டு 8-3-45-ந் தேதி பொள்ளாச்சி வந்து சேருவார் என்று அறிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலி, தச்சநல்லூர்: தோழர் க. கொ. சுந்தரராஜ் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளித்துள்ளார்.

திருவாரூர் மேலவீதி முனையில் திருத்துறைப்பூண்டி மணி தலைமையில் கும்பாபிஷேகமும் நாட்டின் நிலைமையும் என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள்.

## கீழாவரால் பகுத்தறிவாளர் மாநாடு

28-1-45ந் தேதி தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் கீழாவரலில் நடைபெற்ற திருநெல்வேலி ஜில்லா பகுத்தறிவாளர்கள் மாநாட்டில், தோழர் சி. டி. நாயகம் அவர்களின் மறைவுக்கு வருந்தியும், கோவிலுக்கு வஞ்சக முறையில் பணம் சேகரிப்பதைக் கண்டித்தும், மூடநம்பிக்கையை வளர்க்கும் கதைகளிலிருக்கும் பாடப்புத்தகங்களை சர்க்கார் அங்கீகாரம் அளிக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## மன்னார்குடி வர்த்தகத் தொழிலாளர் சங்கம்

ஷை சங்கக் காரியதரிசி தோழர் வி. கண்ணப்பன் வர்த்தகத் தொழிலாளர்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதில் வர்த்தகத் தொழிலாளர்களின் குறைகளை நன்கு விவரித்திருக்கிறார். மேலும் வர்த்தகத் தொழிலாளர் நிலை உயர என்ன செய்ய வேண்டும், கட்டுப்பாடு எவ்வளவு அவசியம் என்பதையும் விவரித்துள்ளார். எங்கும் இனச் சங்கங்கள் நிறுவவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

## சுயமரியாதைச் சங்கம்

பட்டுக்கோட்டை: 11-2-45-ந் தேதி நடைபெற்ற ஷை சங்க கமிட்டிக் கூட்டத்தில் தோழர் ப. மாப்பிள்ளையய்யன் ராஜிநாமா ஒப்புக்கொள்ளப்பட்டு தோழர் ஆர். ஜெயராமன் காரியதரிசியாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் பி. ஆர். சாமிநாதன், சி. என். முருகையன் புதிதாக கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

## மதுரை வீரன் துண்டிக்கப்பட்டான்

மண்ணச்சநல்லூர் வனத்தாய் அம்மன் என்ற பிடாரி கோவிலில் வைக்கப்பட்டிருந்த மதுரை வீரன் உருவம் வெளியே எடுத்துச் செல்லப்பட்டு மூன்று துண்டுகளாக்கப்பட்டு பெருவிளை வாய்க்காலில் போடப்பட்டிருந்தது.

## சென்னை பகுத்தறிவு சங்கம்

சென்னை வண்ணாரப்பேட்டை ஸ்டான்லிநகர் செங்கோட்டையா இலவச வாசகசாலை, காலஞ்சென்ற வித்வான் வி. எ. முனுசாமி பண்டிதரின் நினைவாக 23-2-45ந் தேதி மூடப்பட்டது.

## நன்றி

எங்களின் தந்தையார் தோழர் அ. சி. சுடலைமுத்து அவர்கள் மரணமுற்றமைக்கு வருந்தி நேரிலும், தபால் மூலமும், பல்வேறு இடங்களிலிருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய யாவருக்கும் தனித்தனியே எங்களின் நன்றியைச் சமர்ப்பிக்க இயலாமைக்கு வருந்துவதோடு இப்பத்திரிகைமூலம் எங்களின் பணிவான நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

எஸ். பேரியசுவாமி,
எஸ். அப்பையா.

## கூடலூரில் தமிழிசை மன்றம்

இராவ்சாஹிப் ஆர். வி. சுந்தர ரெட்டியார் பி. ஏ., பி. எல்., தலைமையில் கூடலூர் (O. T) இருசப்பசெட்டித் தெருவில் உள்ள நூல் நிலையத்தில் 6-2-45-ந் தேதி 'தமிழிசை மன்றம்' நிறுவப்பட்டது.

## மருத்துவர்களுக்கு வரி ரத்து

21-2-45தேதிய கரூர் நகராண்மைக் கூட்டத்தில் மருத்துவர்களுக்கு (பார்பர் சலூன்களுக்கு) விதிக்க இருந்த லைசென்ஸை கரூர் மருத்துவர் சங்கத்தார்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ரத்து செய்யப்பட்டுவிட்டது எனத் தெரிகிறது.

## முதலாவது மருத்துவர் மாநாடு

முதலாவது மருத்துவர் மாநாடு 13-3-45-ந் தேதி காலை 10 மணிக்கு கரூர் அம்பிகை தியேட்டரில் திருச்சி தோழர் டாக்டர் கா. பிச்சைமுத்து தலைமையில் நடைபெறும்.

வி. அண்ணாமலை,
வரவேற்புக் கழகத் தலைவர்.

## பிறப்பு

ராமநாதபுரம் மருதங்குடி தோழர் வெ. பழ. செ. வைரவன் மனைவி கருப்பாயி அம்மாள் 10-2-45-ந் தேதி பெற்ற ஆண் குழந்தைக்கு ஸ்டாலின் என பெயரிட்டு, 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

ராசீபுரம் மருத்துவகுல தோழர் கோனான் அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்ததை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

சேலம் குன்னத்தூர் தோழர்கள் வி. வி. ஆறுமுகம்—தையநாயகி ஆகியவர்களுக்கு 21-12-44-ந் தேதி ஓர் ஆண் மகவு பிறந்து தாயும்சேயும் நலமாகயிருக்கின்றனர். ஷை மகவுக்கு 'அன்பரசன்' என பெயரிடப்பட்டது இதன் நினைவாக 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிக்கப்பட்டது.

o o

மதுரை ஜில்லா சின்னாளப்பட்டி தோழர் எஸ். ராமய்யாவின் துணைவி பழனியம்மாளுக்கு சென்ற மார்கழி மாதம் 30-ந் தேதி ஆண் மகவு பிறந்து தாயும்சேயும் சுகமாகயிருக்கின்றனர். இதன் நினைவாக 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

## சென்னை இளைஞர் கழகம்

சென்னை இளைஞர் பயிற்சிக் கழகத்தின் ஆதரவில் 11-3-45 மாலை 5-30 மணிக்கு 192, தங்கசாலை வீதியில் (கார்ப்பரேஷன் பள்ளிக்கூடம்) "நாடகக் கலை" என்பது பற்றி தோழர் வி. டி. செல்லம் பேசுவார். இடையிடையே நடித்தும் காட்டுவார்.

## சீர்காழி திராவிடர் கழகம்

சீர்காழி திராவிடர் கழக நிர்வாக உருப்பினர்கள் தேர்ந்தெடுப்பதற்காக தாளாடன் கோயில் கீழவீதியிலிருக்கும் திராவிடர் கழகத்தில் 7-3-45 புதன்கிழமை மாலை 5-30 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

## திருத்தம்

சென்னையில், 21-2-45ல் நடந்த தோழர் அன்பழகன் வெற்றிசெல்வி அவர்கள் திருமணத்தில் தோழர் இந்திராணி பாலசுப்ரமண்யம் அம்மையாரும், தருமாம்பாள் அம்மையாரும் சொற்பொழிவாற்றினார்கள்.

## தமிழ்த் திருநாள்

### சூரமங்கலத்தில்

சேலத்தை யடுத்துள்ள சூரமங்கலத்தில் 21-1-45-ந் தேதி சேலம் கல்லூரித் தலைவர் தோழர் அ. இராமசாமிக் கவுண்டர் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் தமிழ்த் திருநாள் கொண்டாடப்பட்டது. சேலம் மாவட்ட கல்லூரித் தலைவர் தோழர் என். ஒ. சுந்திரவடிவேலு எம். ஏ., எல். டி., அவர்கள் சொற்பொழிவாற்றினார். தோழர் மன்னிறை இளவலனாரும் பேசினார்.

### தூத்துக்குடியில்

தூத்துக்குடி மேலச்சண்முகபுரம் திராவிட கழகத்தின் சார்பாக, தமிழ்த் திருநாள் 14-1-45-ந் தேதி கொண்டாடப்பட்டது. மாலை 6 மணிக்கு ஓர் ஊர்வலம் நடந்தது.

### ராசீபுரத்தில்

ராசிபுரம் ஷராப் கடை வீதியில் தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு 16-1-45-ந் தேதி இனிய தமிழ்ப்பாட்டுக் கச்சேரி நடந்தது.

### பெங்களூரில்

பெங்களூர் வண்ணாரப்பேட்டை தமிழ் மாணவர் கழகத்தின் ஆதரவில் 18-1-45-ந் தேதி தோழர் தெ. செ. செங்கல்வராய முதலியார் தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

ரேஷஜா முத்தையா

## திருமணங்கள்

தூத்துக்குடி, வடக்கூர் தோழர் இ. நல்லதம்பிக்கும் தோழர் இரேஸ் தேவகன்னி அம்மையாருக்கும் 30-1-45-ந் தேதி வேலூர் தோழர் சி. பி. சின்னராசு தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தது.

* *

சிறுத்தொண்டநல்லூர் தோழர் சிவசங்கு அவர்களுக்கு 24-1-45-ந் தேதி சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

* *

சங்கரநல்லூர் தோழர் இ. பொன்னுசாமிக்கும், தோழர் பெ. அழகம்மைக்கும் 9-2-45-ந் தேதி தோழர் கோ தமிழ்முரசன் தலைமையில் திருமணம் நடைபெற்றது. மணமகனால் "குடி அரசு"க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சென்னையில் தோழர் மீனாம்பாள் சிவராஜ் தலைமையில் தோழர்கள் பி. எஸ். பாலகிருஷ்ணனுக்கும், டி. அன்னம்மாளுக்கும் 21-1-45-ந் தேதி திருமணம் நடந்தது. இதை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சென்னை திருவெற்றியூர் தாங்கலில் 28-1-45-ந் தேதி தோழர் சத்தியவாணிமுத்து அம்மையார் தலைமையில் தோழர் கண்ணனுக்கும், தோழர் பூபதிக்கும் சீர்திருத்தத் திருமணம் நடந்தது.

* *

திருவாரூர் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கோ. அண்ணாமலைக்கும், தோழர் உருக்குமணிக்கும் 11-12-44-ந் தேதி தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில பதிவுத் திருமணம் நடந்தது. 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

11-2-45-ந் தேதி தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் கீடாமங்கலத்தில், தோழர் என். கோவிந்தராசனுக்கும் தோழர் செயலட்சுமிக்கும் திருமணம் நடந்தேறியது. மணமக்களைப் பாராட்டி பலர் பேசினர்.

* *

சலகண்டபுரம்: இவ்வூர் காட்டார் வகுப்பில் பிரபல குடும்பத்தைச் சேர்ந்த தோழர் க. குப்புசாமிக்கும் தோழர் கிருஷ்ண செட்டியின் மகள் பாப்பாத்தியம்மாளுக்கும் 8-2-45-ல் பதிவுத் திருமணம் நடைபெற்றது.

* *

அருப்புக்கோட்டை தோழர் வ. ரு. சி. சிவசுப்பிரமணிய முதலியார் இல்லத்தில் 9-2-45-ந் தேதி தோழர் சி. சுப்பிரமணிய முதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள் முன்னிலையில், தோழர்கள் சு. இராம

## வ. ஆ. ஜில்லா முதலாவது திராவிடர் மாநாடு

4-3-45-ல் திருப்பத்தூரில் (வ. ஆ) நடைபெறும் S. I. L. F. காரியக் கமிட்டிக் கூட்டத்தில், ஏப்ரல் மாதக் கடைசி வாரத்தில் மேற்படி மாநாட்டைக் கூட்டுவது பற்றி ஆலோசிக்கப்படும் என மேற்படியூர் திராவிடர் கழகத்தார் தெரிவிக்கின்றனர்.

## மறைவு

ஏற்காடு தோழர் வி. நஞ்சப்பன் அவர்கள் 18-12-44-ந் தேதி இயற்கையெய்தியதை முன்னிட்டு மேற்படியூர் திராவிடர் கழகத்தின் சார்பாக அனுதாபம் தெரிவிக்கப்படுகிறது.

o o

வந்தவாசி திராவிடக் கழகக் காரியதரிசியும் 'திராவிடமணி' ஏஜண்டுமான தோழர் பி. எஸ். கே. மெதினா சில நாள் நோய்வாய்ப்பட்டு 21-2-45-ந் தேதி இயற்கையெய்தினார்.

o o

நெல்லை வேப்பலோடையாசியும் தீவிர சுயமதிப்பியக்கப் பிரியருமான தோழர் சே. எஸ். சந்தசாமி அவர்கள் 14-1-45-ந் தேதி பம்பாயில் பாரிச வாயுவால் இயற்கையெய்தினார் என்றும் அன்னாரின் குடும்பத்தினருக்கு தமது அனுதாபத்தைத் தெரிவிப்பதாக பம்பாய் நியூஸ் ஏஜண்டு தோழர் எஸ். பெரியசாமி தெரிவிக்கிறார்.

---

சாமியும் கோமதி அம்மாளும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.

* *

கொழும்பில் 9-11-44ல் தோழர் ஒ. ஆ. மா. சாமி தலைமையில் தோழர் பெ. க. சாத்தமுத்துவுக்கும் மதுரைத் தோழர் வீரமணி குமாரத்தி தோழர் அ. வீ. சமாசத்திற்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1-8-0 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

வலங்கிமானில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தோழர்கள் ஆர். சந்தானம், சுலோச்சனா திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு'க்கு ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சேலம் ஜில்லா அரூரில் 23-2-45தேதி தோழர் பெரிய வரி பழனிநாயக்கர் குமாரர் முருகேசனுக்கும் மேற்படியூர் டாக்டர் கணபதி நாயக்கர் குமாரத்தி தனலட்சுமிக்கும் தோழர் ஆ. ரா. மொட்டயன் செட்டியார் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

# திராவிடக் கழகங்கள்

அத்தக்குடி: 23-1-45-ந் தேதி அத்தக்குடி திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் தோழர் மு. வயணவப்பெருமாள் தலைமையில் நடந்தது.

அதுசமயம் டை கழகத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டிடம் வாங்க வேண்டுமென்றும், ஓர் சபா ஆரம்பிக்க வேண்டும் என்றும், ராவ் கமிட்டியாரின் இந்துசட்ட சீர்திருத்த மசோதாவை ஆதரித்தும் சேலம் மாநாட்டுக்குப் பின் நடந்து வரும் எதிர்ப்பிரச்சாரத்தைக் கண்டித்தும் 24000 பேர்களுக்கு மேல் உறுப்பினர் சேர்ந்துவிட்டதால் ஸ்பெஷல் கான்பிரன்சைக் கூட்ட வேண்டுமென்று பெரியாரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1-1-45-ந் தேதி தோழர் சி. குமாரசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் புது வருடத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தலைவர்: மு. வயணவப் பெருமாள், உபதலைவர்: எ. தனமணி, காரியதரிசி: க. தங்கவேல், உபகாரியதரிசி: கா. அருணாசலம், பொருளாளர்: வெ. முத்துமலை, ஆடிட்டர் சி. பெரியசாமி, நிர்வாக உறுப்பினர்கள் 11 பேர்.

பேரளம்: 1-1-45-ஆம் தேதி தோழர் என். மகாதேவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் டி. கே. ஆர். சித்தரம செட்டியார் தலைவராகவும், டி. ரத்தினம் பிள்ளை உபதலைவராகவும், எம். அம்பலவாணம் பிள்ளை பொருள்காப்பாளராகவும், பார்த்தசாரதி நாயுடு, ஜி. சுந்தரராஜ காரியதரிசிகளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். 7 பேர் நிர்வாகக் கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

இருகூர்: இவ்வூர் திராவிட கழகத்தின் சார்பாக 15-1-45-ல் தோழர் ஜெ. எஸ். கண்ணப்பர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் மாணிக்கவாசகம், எஸ். அருணாசலம், இரா. நெடுஞ்செழியன் ஆகியவர்கள் "திராவிட[illegible] கடமை" என்பது பற்றி விளக்கமாக விரிவுரை நிகழ்த்தினார்கள்.

தவுட்டுப்பாளையம்: இவ்வூர் திராவிடர் கழகத்தின் ஆதரவில் 13-1-45-ந்தேதி புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் பொங்கல்நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புரட்சிக்கவியின் மகன் கோபதியும் வீரமணியும் இயக்கக் கீதங்கள் பாடினார்கள். 'ரம்பா!', 'காங்கரஸ்', 'திராவிடம்' என்பவைபற்றி மாணவத்தோழர்கள் திருநாவுக்கரசு, தியாகராசன், குமார், வீரமணி, கரந்தை தமிழாசிரியர் சண்முகம், குமாரவேல் பலரும் பேசினார்கள். தலைவர் தமது முடிவுரையில் புராணங்களின் ஆபாசத்தை தெளிவுபட விளக்கினார்.

கள்ளக்குறிச்சி: 16-1-45 தேதி தோழர் கே. நாராயணன் தலைமையில் நடந்த திராவிடக் கழக உறுப்பினர்களின் கூட்டத்தில் தோழர்கள் வி. ஆர். கலாமணி, பி. கணேசன் பி. ஏ., (ஆனர்ஸ்) முதலியவர்கள் திராவிடர்கழகம் அமைக்கவேண்டும் என்பதுபற்றி பேசியபின், தோழர்கள் கோ. கோவிந்தராசு தலைவராகவும், கோ. இராஜயன் உபதலைவராகவும், தி. வாசுதேவன் செயலாளராகவும், த. மாணிக்கவாசகம் உதவிச்செயலாளராகவும், எஸ். இராமசாமி பொருளாளராகவும் மற்றும் 8 பேர் நிர்வாகக் குழுவினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

திருச்சி: 15-1-45-ஆம் தேதி தோழர் என். சங்கரன் தலைமையில் நடந்த திராவிடர் கழகக் கூட்டத்தில் அந்தந்த மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் கருணாநிதி பார்க்கில் கமிட்டிக் கூட்டம் கூட்டப்படுமென்றும், அங்கத்தினர் சேர்க்கும் புத்தகங்கள் வேண்டுவோர் என். சங்கரன் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலா மென்றும்; கழகத்தலைவர் ரூ 2ம், உபதலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் ஆகியவர்கள் ரூ 1ம், நிர்வாகஸ்தர்கள் 8 அணாவும் மாதச் சந்தாவாகக் கொடுத்துவர வேண்டுமென்றும், சேர்ந்தாற்போல் மூன்று கூட்டங்களுக்கு வராத கமிட்டி மெம்பர்கள் கமிட்டியிலிருந்து நீக்கப்பட்டு புதியவர் சேர்க்கப்படுவார்கள் என்றும், தோழர் பெ. டி. நாயகம் அவர்களின் மறைவுக்கு வருந்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

தெ. ஜெடார்பாளையம்: 16-1-45ல் தோழர் எம். ஆர். மாதவன் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகக்கூட்டத்தில், தோழர்கள் எம். ஆர். மாதவன் தலைவராகவும், மதிவாணன் உபதலைவராகவும், ஐ. அன்பானந்தன் காரியதரிசியாகவும், சி. மகாதேவன் உபகாரியதரிசியாகவும், கேசவன் பொருளாளராகவும், 15-பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

கோவிந்தன் பாளையம்: 15-1-45ந்தேதி தோழர் கோவிந்தன் தலைமையில் நடந்த கூட்டத்தில் கரந்தை தோழர் ஆர். எழில்மலையனால் திராவிடர் கழகம் திறக்கப்பட்டது. பின் தோழர்கள் ஜெ. மாணிக்கம் தலைவராகவும், நாராயணசாமி துணைத் தலைவராகவும், காலடியார் செயலாளராகவும், நல்லதம்பி துணைச் செயலாளராகவும், நா. நாராயணன் பொருளாளராகவும் 30 பேர் உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

கரூர்: 13-1-45-ந் தேதி தோழர் கணேசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் 1945-ம் வருடத்திற்கு தோழர்கள் கெ. கோவிந்தராசு தலைவராகவும், ஆர். பி. சாமி உபதலைவராகவும், டி. தமிழரசு செயலாளராகவும், எம். கே. கரிகாலன் உதவி செயலாளராகவும், தலைவரே பொருளாளராகவும், 13 பேர் உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

பெரிய ஆண்டான்கோவில்: தோழர் மாரியப்பன் அவர்கள் தலைமையில், 14-1-45-ந் தேதி திராவிடர் கழக திறப்பு விழா நடை

பெற்றது. தோழர்கள் தமிழரசு, பி. கெ. அய்யா முதலியவர்கள் பேசிய பின் ஷை கழகத்திற்குத் தோழர்கள் வையாபுரி தலைவராகவும், மாரியப்பன் உபதலைவராகவும், புக்காண்டி செயலாளராகவும், 5 பேர் அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

திருமாநிலையூர்: தோழர் பி. பழனியப்பன் தலைமையில் 15-1-45-ந் தேதி நடந்த கூட்டத்தில், திராவிடர் கழகம் துவக்கப்பட்டது. அதற்குத் தோழர்கள் கே. காரலன் தலைவராகவும், பி. பெரியசாமி உதவித் தலைவராகவும், வி. கிருஷ்ணன் செயலாளராகவும், என். தங்கவேலு உதவிச் செயலாளராகவும், என். சந்தானம் பொருளாளராகவும், 8 பேர் கழக உறுப்பினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

புலியூர்: 11-1-45-ஆந் தேதி தோழர் பி. கெ. அய்யா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், புலியூர் தெ. இ. ந. உ. சங்கத்தை திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்பட்டது. சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டன. காலஞ் சென்ற சி. டி. நாயகம் அவர்களின் மறைவுக்கு வருந்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஷை கழகத்திற்கு தோழர்கள் அ. ப. வடிவேல் பிள்ளை தலைவராகவும், கே. கே. பாலையா உபதலைவராகவும், எஸ். ஏ. மயில், டி. எஸ். ரெத்தினம் செயலாளர்களாகவும், பி. கந்தசாமி நாடார் பொருளாளராகவும், 20 பேர் கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

குளித்தலை: 16-1-45ல் தோழர் திருமாறன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் "திராவிட நாடும் நமது கடமையும்" என்பது பற்றி மீமிசல் ராசு, சாம்பசிவம், ஆர். ராசசேகர் முதலியவர்கள் பேசினார்கள்.

* *

வேளுக்குறிச்சி: 16-1-45ல் மிட்டாதார் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம் தலைவராகவும், கே. ரங்கசாமி உபதலைவராகவும், டி. அருணதிரன் பொருளாளராகவும், எஸ். சுலைமான் செயலாளராகவும் 17-பேர் கழக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

அம்மாப்பேட்டை: 1-1-45-ஆந் தோழர் கே. ராமசாமி தலைமையில் நடந்த பனகால் திராவிடர் கழகக் கூட்டத்தில், சேலம் மாவட்டத்தில் மாதமொரு முறை திராவிடர் கழகப் பிரச்சாரம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

17-1-45 தேதி தோழர் கா. பொன்னுசாமி தலைமையில் தாதம்பட்டியில் ஷை கழக ஆதரவில் நடந்த கூட்டத்தில் "காங்கரசும் நாமும்" என்னும் பொருள்பற்றி பலர் பேசினார்கள்.

* *

திருவண்ணாமலை: டேனிஷ் மிஷன் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் தோழர் எஸ். யு. ஜ. ராஜரத்தினம் பி. ஏ., எல். டி., தலைமையில் நடந்த கூட்டத்தில், புலவர் ந. மு. மாணிக்கம் திராவிடர் கழகத்தைத் திறந்துவைத்தார். தில்லை தோழர் பத்மநாபன் கொடியேற்றுவித்தார். குடந்தை தோழர் பி. சி. சிங்கப்பா இயக்க கீதங்கள் பாடினார்; பலர் பேசினார்கள்.

14-1-45 தேதி நடைபெற்ற ஷை கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டத்தில், போலி ஜஸ்டிஸ் கட்சியை கண்டித்தும், இந்து சீர்திருத்த மசோதாவைக் கண்டித்தும், தோழர் செ. த. நாயகம் மறைவுக்கு வருந்துவதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அநுசரணையாக ஆடும் ஆரியத்திற்கும் அடிமைகளாக வாழ முடியாது. ஆரிய அழிவு அதன் நிழலான ஆங்கிலத்தை ஆறாயிரம் மைலுக்கு அப்பாலேயே ஆழ்த்திவிடும். இந்த எண்ணமே இன்றைய திராவிடம் இருக்கிற நிலையில் வருவதால் எங்கும் எழுகிறது.

மேற்கூறிய முன்னேற்றங்களை திராவிடம் நுகரவேண்டுமானால் நாட்டுப் பிரிவினையென்ற நல்லதொரு மருந்தால்தான் முடியும். இனத்திற்கேற்ற இடத்தை வகுப்

பதே இயல்பு என்றதும் பாரத மாதாவைப் பங்குச்செய்கின்றனர் என்று பதைத்த காங்கரஸ் எனும் கபோதிக் கூட்டம் ஒரு ஆச்சாரியார் உபதேசத்தால் பித்தம் தெளிந்த காந்தியார் பிரிவினையை ஒளவிற்கு ஒத்துக்கொண்டவுடன் லாலி பாடி பின்னணி இசையாக இயங்க ஆரம்பித்தது. இப்படிப்பட்ட வேடிக்கைகள் இங்கே வாடிக்கைதான் என்பதை அறிந்த திராவிடம் உள்ளுக்குள் சிரித்துக் கொள்கிறது. அப்படிப்பட்ட தத்துவத்தைப் போதித்த பெரியார் அவர்கள் நமக்குக் கிடைத்தற்கரிய அருந்தலைவர். முஸ்லிம்களுக்கு ஜின்னா; தாழ்த்தப்பட்டவர்களுக்கு அம்பேத்கார்; கபோதிகளுக்குக் காந்தி; இந்துக்களுக்குச் சாவர்க்கார்; திராவிடர்களுக்குப் பெரியார். சமத்துவத்திற்குச் சமர் பல புரிந்த சன்மார்க்க சிங்கமாம் பெரியாரின் இருதய கீதமே, இன்னிசை ஒலியே, இன்பவெள்ளமே 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற முழக்கம். திராவிடம் ஒரே நோக்கத்தை நோக்குகிறது. திராவிட சமுதாயமென்னும் சமுத்திரம்; மதங்களெனும் அலைகள்; மூடப்பழக்க வழக்கங்களாம் முதலைகள். ஆரிய சூழ்ச்சிகளாம் சுழலும் சூறாவளியும்; கடல் கொந்தளிப்பும். அதோ எதிர்த்துப் போகிறதே அதுதான் தன்மானக்கப்பல். கப்பற்றலைவன் வெண்தாடி வேந்தன், அருகிலே முதல் மாலுமி அண்ணா. பிரயாணிகள் திராவிடர்கள், கரை சேர வேண்டும் அதாவது நாட்டை நமதாக்கவேண்டும். இது லட்சியம். அடைந்தே தீருவோம் திராவிடம்.


## தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமல்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி

மானேஜர்.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.